உ

சிவமயம்.

# வேளாளன்

## தூத்துக்குடி.

"மேழிச் செல்வம் கோழை படாது" ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு.

வயது 2 } 1105ளு பிரமோதூதஞு சித்திரைமீ 31உ { மாதம் 1

" அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே."

### திருமகள் துதி.

பாளையங்கோட்டை, திரு. C. P. ஆநந்தம் அவர்கள்

1. மண்ணை விண்ணை யன்றளந்துண்ட கார்வண்ணன் மனைக் கிழத்தி,
மண்ணை மருவுவான் வேண்டி மயங்கி நின்றே னல்லே னுன்,
விண்ணைப் பெறுவான் விழைந்தே னல்லே னறிய கில்லாயோ,
உன்னையே வேண்டினேன் உறுபத மளித்துக் காப்பாய் தானே.

2. அம்மையே நின்னை நாளும் பணிந்து நின்றே னறியாயோ,
இம்மையும் வேண்டினேனில்லை இயற்பெரும்பத மொன் றையே கருதி,
அம்மை நல்கினும் வேண்டின் என்னு முறுதியிற் றழைக்க வென்,
அம்மையே அருள் வழி காட்டி யாட்கொள்வாய் கருணை வாரியே.

இறுதி சூழ்வது இம்மையிற் பெரும்பயன்
அறுதி கொள்வது அம்மையி லுறுபதம்
உறுதி நல்கும் நின் கொய்மலர்ச் சேவடி.
பெறுதி யென்னப் பெறுவது பெற்றியே.

## புதிய ஆண்டிற் புகுதல்.

பால் மணம் மாறாத பாலனை நமது வேளாளன் ஓராண்டை ஒருவிதமாகக் கடந்து இரண்டாவதாண்டை இன்று பெற்றிருக்கின்றான். வேளாளர் மரபின் நல் வளர்ச்சி கருதி பிறந்து வளர்கின்ற வேளாளனை வேளாள மக்கள் அனைவரும் ஆதரிக்க வேண்டுவ தவசியம். தாழுண்ட நீரைத் தலையால்தரும் தென்னை போல் வேளாளனை வளர்க்கும் வேளாள மக்கள் விரைவில் விழுமிய பயன் பெறுவது உறுதி. ஓராண்டாக வளர்ந்த வேளாளன் செழிமையுடன் வளரவில்லை யென்பது நேயர்கள் அறிந்ததே. இறைவன் திருவருட் டிறத்தால், நமது செட்டினத்தால், நன்கொடையாளர்கள் நல்லுதவியால் வேளாளன் வளர்ந்தான. இவ்வாண்டு முதல் நமது வேளாளன் சந்தாதார்கள் ஆதரவுகொண்டே வளர்ந்துவரவேண்டுமென்பது நமது விருப்பம். வேளாளர்கள் வீடொன்றுக்கு ஒரு சந்தாதாராகச் சேர்ந்தால் பதினாயிரக் கணக்கான சந்தாதார்கள் கூட மிக எளிதில் சேரலாம். சந்தாத் தொகையும் குறையும், பக்கங்களும் கூடும். பிறபொதுப் பத்திரிகைகளைப் பார்க்கிலும் நமது வேளாளனின் சந்தாத் தொகை கூடுதலெனினும் நமது செலவினங்களின் விரிவை நோக்கினால் பிறசமூகப் பத்திரிகைகளின் சந்தாத் தொகையை நோக்கினால் இஃதொரு பெரிதல்ல.

சென்ற ஆண்டு ஆதரித்த சந்தா நேயர்கள் எல்லோரும் இன்னும் ஆதரிக்க வேண்டுமாய் விரும்புகின்றோம். சென்ற ஆண்டில் ஆதரியாத அன்பர்கள் இவ்வாண்டு முதலாவது அவசியம் ஆதரிக்க வேண்டுகின்றோம். பொதுவாக நமது நாடு ஒற்றுமை குலைந்து வேற்றுமை வளர்ந்து வறுமையில் மூழ்கிக் கிடப்பினும் சிறப்பாக வேளாளர் சமூகம் ஒற்றுமை குலைந்து வேற்றுமை வளர்ந்து பொருளைப் புன்னெறியில் பொறாமைகொண்டு விரையமாக்கி வறுமையில் மூழ்கி உண்ண உணவும் உடுக்க உடையும் இருக்க இடமும் போதிய அளவு கிடையாமல் பொழுதைப் போக்குகின்றது. மக்கள் செழிய நிலைக்கு ஒற்றுமையும் கட்டுப்பாடும் தெய்வ பக்தியும்கொண்டு தொழிற்றுறைகளில் ஈடுபட்டு

நீதியான முறையில் உழைக்கவேண்டும். ஒற்றுமையின் உயர்வை ஓர் எடுத்துக்காட்டால் ஞாபகஞ்செய்கின்றேம். காற்றில் பறந்தோடும் ரோமத்தை மயிரைப் பலவாகச்சேர்த்து வடமாகத் திரித்து வைத்தால் தேரையும் இலகுவில் இழுத்துச் செலுத்தும் இயல்பைப் பெறுவது இயற்கை. தனித்திருந்தால் பறந்தோடும் மயிர்க்கூட்டம் ஒன்று பட்டால் மக்களால் கூட அசைக்க முடியாத தேரையும் அசைத்து இழுத்துவிடுமென்றால் ஒற்றுமையின் உயர்வை உரைக்கவும் வேண்டுமோ?

நமது சமுகம் செழிமையுடன் வளர்ச்சிபெற்று வாழ்ந்ததற்குக காரணம் பல விருப்பினும் சமயத் துறையிலும் அரசியற்றுறையிலும் உண்மையான பேரன்பு கொண்டு ஒழுகியதே சிறந்த காரணங்களாகும். சமயத்துறையும் அரசியற் றுறையும் தற்காலம் அசைந்து வருவதாற்றான் நம் சமுக மக்கள் வாழ்க்கை வீழ்ச்சியுற்றிருக்கின்றது. அரசியலென்றால் அறுவறுப்பார் ஒரு சாரார். சமய மென்றால் சங்கடமென்பார் ஒரு சாரார். நம் மக்கள் வளர்ச்சிக்கு வகைகள் பல விருக்கலாம். வளர்ச்சிக்கு வகையென்று நினைப்பன சில வீழ்ச்சிக்கு வகையாகலாம். வளர்ச்சிக்கு மக்கள் பல வழிகள் கூறலாம் ஒருவர் கூறும் வழி மற்றொருவருக்கு மாறுபடலாம். மற்றொருவர் கூறும் வழி இன்னொருவருக்கு மாறுபடலாம்; என்றாலும் எல்லா மக்களின் நோக்கமும் வளர்ச்சியே யாதலால் கருத்து வேறு பாட்டால் யாரையும் வெறுத்தொதுக்குதல் முறையாகாது. இதுவேபோல் வேளாளனை நடாத்தும் நம் கருத்து ஒன்றாக விருக்கலாம். கட்டுரை தரும் கனவான்கள் பலரும் பல் வேறு கருத்துடையவர்களாக விருக்கலாம். சந்தாதார்கள் பலரும் பல வேறு கருத்துடையவர்களாக விருக்கலாம். கருத்து வேற்றுமை கொண்டு வேளாளனிடத்து யாரும் வெறுப்புக்கொள்ளுதல் முறையாகாது. கருத்து வேறுபாடு மக்களுக்கு இயற்கை. கருத்து வேறுபாடு காரணமாக மக்கள் ஒருவரை யொருவர் வெறுத்து ஒதுக்குதல் நம் சமுகத்தில் மிகமிஞ்சி வளர்கின்றது இதனை யாவரும் அறவே ஒழித்தல் வேண்டும்.

ஒன்றுபட்டு வாழ்க்கை நடாத்த கருத்து வேற்றுமையால் வேறுபட்டு நிற்றலை யொழிக்க தொழிற்றுறைகளை வளர்த்து வாழ் வழிகாட்டி வளர்ந்துவரும் வேளாளனைப் பெறுகின்ற பார்க்கின்ற தெரிகின்ற மக்கள் அனைவரும் பிறமக்களுக்குத் தெரிவித்துக் கிராமங்கள் தோறும் வீடுகள் தோறும் சந்தாதார்கள் சேரும்படி செய்ய மிகவும் அன்புடன் வேண்டுகின்றோம். எல்லாம் வல்ல இறைவனும் பாலப்பருவமான பால் மணம் மாறாத வேளாளனை நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக வளர்ந்துவர இன்னருள் சுரக்க இறைஞ்சுகின்றோம். வையகம் வாழ்க வன் மழை வழங்குக.

---

## வேளாளன் வாழ்த்து.

(பேட்டை, திரு. ராமலிங்கம் பிள்ளையவர்கள்)

வெண்பா.

வேளாள னென்னும் விழுமியநன் மாசிகையின்
மாளாத மேன்மை மதித்துரைக்க—ஆளான
என்னிடரைப் போக்கி யினிய வறிவளிப்பன்
இன்னியலார் யானைமுகனே.

கொச்சகப்பா.

ஏதமிலா மந்த்ராநக ரெழின்மிருந்த தனவான்கள்
ஆதரவால் வந்துலவும் அன்புமிகு வேளாளன்
நீதமுள நெறிமுறைகள் நேர்மையொடு தாங்கிமிகப்
பூதலத்தி லெக்நாளும் புகழ்பெருக்கி வாழியவே.

உண்மைதனி லுயர்வுடைய வுத்தமவே ளாளர்சீர்
திண்மையொடு நிலைநாட்டித் தீநெறிக ளகற்றிமிக
எண்மையடை யாததமி ழெங்கெங்கும் பாவிடவும்
வண்மையுற வுழைத்துநனி வளம்பெருக்கி வாழியவே.

வேளாளன் பெயர்தனை விழுப்பமொடு தாங்குதலின்
கேளாக வெவ்வெவரும் கேடுபடாத் திறமடையத்
தாளாகப் பலநலமுந் தரத்தக்க கட்டுரைகள்
கோளாறு சிறிதுமின்றிக் கொண்டுலவி வாழியவே.

எளியநடைத் தனித்தமிழி னிணிதான கட்டுரைகள்
வெளியநடை யாய்க்கொண்டு வெளியில்வரு வேளாளன்
களிமிகுந்து கைக்கொண்டு காதலிக்கு மனைவரையும்
அளிமிகுந்த நன்னெறியி லார்வித்து வாழியவே.

திங்கடொறுந் தவறாமல் தெளிவுடைய பூரணையில்
துங்கமுடன் வெளியேறிச் சுகமளித்தே யுலவிவரும்
பங்கமிலாப் பண்புடைய பார்புகழும் வேளாளன்
அங்கமதா ரூபாவு மளிப்போரும் வாழியவே.

ஆண்டிற்கு ரூபாயிரண் டன்புடனே யளித்துதவின்
பாண்டித்ய மிகுந்தபல பாவலர்க ளெழுதிவரும்
காண்டகைய பொருள்களெலாங் கண்டிலா மிதன்மூலம்
வேண்டிமிக விதுபார்க்க விழைவோரும் வாழியவே.

இன்னமுத மாகுமென்ன வின்புதரு வேளாளன்
நன்னருற நடத்திவரு நண்புடைய வாசிரியன்
பொன்னம்பல மெங்கலமும் பூரணமாய்ப் பெற்றுவந்து
பொன்னம்பலக் கூத்தனவன் புரியருளால் வாழியவே.

---

## சுகாதாரம்.

சானிட்டரி இன்ஸ்பெக்டர்,

திரு. உ. கணபதியப்ப முதலியாரவர்கள்.

இம்மண்ணுலகின்கண் தோன்றியிருக்கின்ற எண்ணற்ற ஜீவராசிகளுக்குள் எவ்வகையிலும் மேம்பட்டதாகக் கருதப்படு கின்ற மானிட ஜென்மத்தின் நிலையானது நாளுக்குநாள் விருத்தி யடைந்துகொண்டு வருவதை நாம் நேரில் பார்க்கிறோம். சாஸ் திர ஆராய்ச்சிகளும், அதனால் அடையும் அறிவின் உயர்வால் உண்டாகும் அளவற்ற சௌகர்யங்களும், நாகரீகத்தின் வனப்புக ளும் மக்களுக்கு இம்மண்ணுலக வாழ்க்கையில் அமோகமான ஓர் ஆர்வத்தைக் கொடுக்கின்றன. ஒவ்வொருவனும் தன் தன்ம னப்பான்மைக்குத் தக்கவாறு, நாமும், ஐயந்திரிபறக் கல்விகற்று அரும்பெரும் பண்டிதராய் விளங்கவேண்டும், வைத்திய நூல்

களை வரையறக்கற்று வையகம் புகழ வாழவேண்டும், ரசாயன முறைகளை நன்கு பரீக்ஷித்து நலனுறு புதுமைகளை நாட்டிற்கு நல்கவேண்டும், உயர்ந்தோர் அரசாங்க உத்தியோகத்திலமர்ந்து உண்மையாய் உழைக்கவேண்டும், எனப் பலவாறு எண்ணுகின்றனர் ஆசையுற்றோர் அனைவரும் அடைகிறார்களா இன்பம். இல்லையே. யாது காரணம்பற்றி? ஒருவன் தனது எண்ணத்தைப் பூர்த்தி செய்துகொள்ளப் பொருளுதவியின்றி ஏங்குகிறான் மற்றொருவன் ஏராளமான தனத்தை வைத்துக்கொண்டு தான் நினைத்ததை முடிக்கச் சரியான வழிகாட்டியாக ஓர் ஆசானின்றித் தவிக்கிறான். இன்னுமொருவன், இவையெல்லாமிருந்தும் தனது சொந்தச் சரீரத்தின் உதவியின்றித் தயங்குகிறான். பொருளுதவியும் மனிதருதவியும் பெற்று அவன் உற்சாகமாகத் தன் வேலையைத் துவக்குங்கால் அவனுடம்பே அவன் மனதிற்கு விரோதியாய்த் தோன்றி, எத்தனையோ கோடி வியாதிகளில் ஒன்றைத் தனக்குத் துணையாய்க் கொண்டு அவனை எதிர்க்கிறது. என்செய்வான் பாவம்! ஊணுறக்கமின்றி நடக்கச் சக்தியற்று சடலத்தைக் கிடத்தவோர் படுக்கையைத் தேடுகின்றான். தனமிருந்து மென்னும் தாணிதனிற் துணையிருந்து மென்னும், சரீர சௌக்கியமின்றேல் உயிரிழந்தவனுக்குச்சமானமாகின்றான். அஃதன்றி தேக ஆரோக்கியத்துடன்மட்டும் ஒருவனிருப்பானானால் எவ்விதமும், பொருள் தேடுவதிலும் பெரியோர் நேசம் பெறும் வகையிலும் விடாமுயற்சி செய்து தன் எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம்.

குபேர சம்பத்தை அடைந்தவனாயிருந்தபோதிலும் ஒருநாள் அவன் சரீரத்திற்குச் சிறிது சுகமில்லை என்றால் அவனுடைய சந்தோஷமெல்லாம் காற்றாய்ப் பறந்துவிடுகிறது தேக ஆரோக்கியத்துடனிருக்கும் ஒரு ஏழையைப் பார்த்துப் பொறாமைகொள்கிறான். நேர்த்தியான பலகாரங்களைக் கண்டால் அவன் வாயில் ஜலமூறுகின்றது. தின்றாலோ ஜீரணமாகாது. அண்டை வீட்டார் கொண்டாட்டமாகவே பந்து மித்திரர்களுடன் விருந்துண்பதும், விநோதக் காக்ஷிகளைக் காண வெளியிற் செல்வதும், ஆறு

குளங்களுக்கு நீராடப் போவதும், தங்களை சிருஷ்டித்த தெய்வத்தை நினைத்துத் துதிக்க ஆலயங்களுக்குச் செல்வதும் ஆகிய பலவித இன்பங்களை அநுபவிப்பதுகண்டு, "ஐயோ! நாம் இவ்வாறெல்லாம் சந்தோஷமாக யிருக்க முடியவில்லையே, எழுந்திருக்கவோ சக்தியில்லையே, பேசவோ ஆயாசமாயிருக்கின்றதே, கண் பார்வை குன்றுகிறதே. உயிரிருந்தும் இறந்தவனுக்குச் சமானமாகவன்றோ இருக்கிறோம்" என்று வருந்துகிறான். இவ்விதம் அவனுடைய சுகத்தையும், மனோ உற்சாகத்தையும் கெடுக்கவேண்டுமென்று அவனை அணுகியிருக்கும் விரோதியாகிய தேக அசௌக்யம் அவனோடுமட்டும் நின்றுவிடுகிறதா? இல்லை. அவனுடைய உற்றார் உறவினர் யாவரையும், தங்கள் சொந்த ஜோலிகளைவிடுத்து அவனருகிலிருந்து அவனுக்கு வேண்டும் பணிவிடைகள் புரியும்படி செய்கிறது. வியாதியஸ்தன் வருத்தம் ஒரு பங்கானால் அவனைச் சுற்றியுள்ளார் படும் கஷ்டம் நூறு பங்காகும். சரியான நேரத்தில் ஊண் உறக்கமின்றி வியாதியஸ்தனுக்கு வேண்டும் சௌகர்யங்களைச் செய்துகொண்டிருப்பவர், தாங்கள் அவ்வியாதியினின்றுந் தப்புவது மிகவும் துர்லபம். கடைசியாகவியாதியினின்றும் விடுவிக்கப்பட்டவர் அதுவரை தாம் பட்ட கஷ்டத்திற்காகத் தன் விதியை நொந்து வருந்துவர். (தொடரும்)

---

ஆற்றூர் பென்ஷன் தாலூகா சிரஸ்தாதார் கௌமாரபக்தி,
A. T. இராமலிங்கம் பிள்ளை அவர்களியற்றிய,

"திருச்செந்தூர்த் தண்டகமாலை".

---

காப்பு.

சீர்மலிசெந் தூர்வளருந் தேவானை வள்ளியுட
னேர்மலிவே லேந்திமயி லேறிவரு—மோர்முருகன்
றண்டா மரைப்பதத்திற் றண்டகத்தார் சாற்றவெனக்
குண்டாங்கை நாகத் துவப்பு.

## நூல்.

### நேரிசை வெண்பா.

1 பூவி லயன்மால் புரந்தான்மற் றும்பரெலாஞ்
சேவிக்கச் செந்தூரிற் சேர்முருகா—ஆவிதனக்
குற்ற துணையா முனையடைத லன்றோயான்
பெற்ற பிறப்படையும் பேறு.

2 பெண்க டனமும் பிறங்குமவர் பேரெழிலுங்
கண்கவா விட்டுக் காந்தனையோ—தண்கமலம்
பற்றாதே பாவி பாதவிக்க யாரெனக்குச்
சொற்றாரோ செந்தூரா சூள்.

3 பாடிப் படித்துனக்கு பத்திசெய்யும் வேளையினு
மோடித் திரிந்துமய லுற்றதே—பேடிமனங்
கட்டார்செந் தூர்வளருங் கந்தாவுன் சேவடியைக்
கிட்டாரென் செய்வேன் கிளத்து.

4 பத்திசெயும் பேதேனும் பண்பொடுசும் மாவிரென
வெத்தனையோ புத்தி யிசைத்தாலும்—பித்தமனந்
தான்போன பொக்கேதான் சாதித்தாற் செந்தூரா
நான்போக லெப்போ நவில்.

5 உண்மையறி வாள ரொதுங்கியிருந் தானந்தங்
கண்பொழிய நின்றே கருதுவார்—பண்பொழியுஞ்
சிந்தையனேன் மெத்தத் தெரிந்தவர்போற் செந்தூரா
முந்துகிறே னேதோ மொழிந்து.

6 உண்டுறங்கும் போது முனைநினைய வல்லாரோ
கண்டுருகிச் சேருங் கருத்துடையார்—வண்டணையுங்
கூந்தலார் சிந்தனையே கொண்டலைவேன் செந்தூரா
நீந்தலுண்டோ பாவ நிகழ்த்து.

7 ஒருகாலத் தேனுமுனக் குள்ளன்பு மிக்கப்
பெருகா தரத்தொடு பேணி—முருகாகந்
தாவென்றாற் செந்தூரா தாராயோ வுன்னடியைப்
பாவென்றால் வாராயோ பார்த்து

8 வன்னியே கேதனமாய் வாசவனை வாகனமாய்ச்
சென்னியா றுய்த்திகழுஞ் செந்தூரா—வுன்னியுனைப்
பத்தி வலையாலே பந்திப்பான் றந்தருளாய்
சித்தி யடையுந் திறம்.

9 அறப்பகையோ டெற்பகையு மாளாமுன் பின்னு
மிறப்பகைவே றூங்குசெந்தூ ரீசா—விறப்ப
வரினுமுன் பாத மறப்பனோ துன்பு
தரினுஞ்சேய் நீங்குமோ தாய்.

10 நாயேனை யாண்டருளு நாயகனே செந்தூரிற்
றூயானு யெல்லோர்க்குந் தற்பரனே—யோயாமற
பன்னிருதோ ளாறுமுகம் பச்சைமயில் வேலுடனே
யென்னிருகண் முன்வா யெழுந்து.

11 நாவாரப் பாடிநித நாயகனே செந்தூரா
பூவாருன் சேவடிக்கே போதிடுவேன்—காவாரும்
வானாட் டரசு மதிப்பனோ நின்னருளிற்
றுனாட்டம் வைத்தபின்னுந் தான்.

12 தனக்குவமை யில்லாதான் றுனைவையு மாறுன்
றனக்குமுப சேசிக்குஞ் சாமி—எனக்கருளு
நற்றவனே சீரலைவாய் நாயகமே யுன்னடியே
பற்றெனயான் கொண்டேன் பரிந்து.

13 பரிந்துபல நூல்கள் பயின்றுமலை தோறுந்
திரிந்துபல னெய்திலருஞ் செந்தூர்—பொருந்தியே
கந்தாவுன் பாதங் கருதுவரேல் முத்தியுடன்
றந்தாள்வா யென்பார்நீ தான்.

14 தான்மறைக ளோதுஞ் சமர்த்தனெனத் தற்புகழு
நான்முகனை வன்சிறையி னிட்டியவா—தேன்வழியுஞ்
சந்தவரைச் சண்முகனே சந்ததமு முன்னருளே
சொந்தமெனக் கென்றேன் றுணிந்து.

15 துணிந்தநில் வோடறுகு தூயகொன்றை சென்னிக்
கணிந்தசிவ னார்மகனே யன்பாற்—பணிந்தவினோர்

துன்பந் துடைத்தசெந்திற் றூயோனே துன்பமுட
னின்பந் துடைத்தனையா னீண்டு.

16 ஈண்டுபொரு ளுண்முழுது மீட்டுவதிற் றூன்கழித்தா
லாண்டுலகுக் கேதுபய னுக்குவேள்—வேண்டுபொரு
ளத்தனையுஞ் சீரலைவா யாறுமுகா நீயருள
வித்தனைபா டெற்கே னியம்பு.

17 இயம்புமறை நான்குமே யெத்தனையோ காலம்
நயம்படநின் றேத்தியுங்கா ணுதான்—சுயம்பிரகா
சத்தொளியாய்ச் செந்தூரிற் சண்முகனு யெற்கருளுஞ்
சத்தொளியா னந்தமயன் றான்.

18 தன்பேரி லாசை தமியேற்கிங் கூட்டினன்
றன்பேருஞ் சொல்லத் தருமோதான்—அன்பேறக்
கூடிக் குலாவிக் குகனென்றீ தான்மறைந்தான்
சேடியரே செந்தூரிற் சேய்.

19 சேயாக வந்தான் சிரப்புரத்த வேதியர்பாற்
றீயே னிருளகற்றுந் தேவனே—தாயார்
வயிற்றிற் பிறவா வகையருளுஞ் செந்தூர்
குயிற்றியபொற் கோயிலாய்க் கொண்டு.

20 கொண்ட கணவனே குற்றமெனத் தள்ளிடலவ்
வொண்டொடிக்கிங் கேதுசுக முத்தமனே—பண்டைவினை
யாளுலுஞ் செந்தூரா வாண்டவநீ யானடிமை
தானுகுங் காத்தாள் தடுத்து.

21 தடுத்தடிமை கொண்டுந் தனதடியார்க் காக
நடித்தருள்பொன் னம்பலவ ஞரி—கொடுத்த
முலைப்பா லருந்தியவன் மூதெயில்சூழ் செந்தூ
ரலைப்பா லுகந்தபெரு மாள்.

22 ஆளவல்லாய் தஞ்சமென வாண்டுகொண் டென்றுள்ள
நீளமெலாஞ் சோதித்த நீதியோ—காளகண்டக்
கண்ணுதலார் பெற்றருளுங் கற்பகமே செந்தூர்
வெண்ணுதலென் கொண்டபின்ன ரின்று.

23 இன்பமெனப் பேயுலக மெண்ணுவன முற்றுமே
துன்பந் தருமாற் சுகமருள—லன்புருவாய்
நின்றதிருச் செந்தூர் நிமலாநின் சேவையலா
தொன்றிலைமற் றென்னு முலகு.

34 உலவா வறம்பொருளின் போடுயர்வீ டென்பாள்
தலைவாநின் றண்டைக்கா ருமே—கலவா
திருந்தாலுந் தோடமிலை யாரினிச் செந்தூரா
வருந்தாது கொள்வார் மகள்.

25 மகவான் குறையிரப்ப மாசூர் வலிதடியும்
பகவானென் றோலமிடும் பாவை—தகவா
வருளாயேற் செந்தூ ரறுமுகனே மெத்த
மருளாதென் செய்வாள் மறுத்து.

(இன்னும் வரும்)

## மேல் நாட்டு வாழ்க்கை.

லண்டன். திரு. ந. சண்முகசுந்தரம் பிள்ளை யவர்கள், M. A.

(முன் தொடர்ச்சி.)

ஆண் பெண் வேற்றுமை உணர்ச்சியே மிகுந்து கிடக்கும் இந்நாட்டினர்க்கு மேல் நாட்டார் அவ்வித வேற்றுமை உணர்ச்சியின்றி தங்களுக்குள் சாதாரணமாய் பழகிக்கொள்ளுதல் அவர்களின் ஒழுக்கக் குறைவைக் காட்டுவ தகத்தோன்றும். இருபாலாருக்கும் இடையில் நம் மில் பெரும் பிளவு ஏற்பட்டுக் கிடப்பதால் மேல் நாட்டார் dance கூத்தாடுவதை நாம் கூடா ஒழுக்கமாக கருதுகிறோம். ஆனால் அவர்கள் அதை ஒரு குற்றமற்ற விளையாட்டாகவும், உற்சாக மேலீட்டால் ஏற்படும் களியாட்டாகவும் கருதுகிறார்களே யன்றி சூதாக மனதில் ஒருபொழுதும் எண்ணுகிறதில்லை. இவ்வாறே மேல் நாட்டாரில் வயது முதிர்ந்த பெற்றோர்களும் சகோதர சகோதரிகளும் ஒருவரை ஒருவர் முத்தமிட்டுக்கொள்ளும் வழக்கமும் ஆகும். Miss Mayo கூறியபடி நம் நாட்டில் காம உணர்ச்சி மிகுந்திருப்பதற்குக் காரணம் நம்மில் சிற்றின்ப நுகர்ச்சிக்கன்றி ஏனைய சமயங்களில் இருபாலாரும் அளவளாவிக் கொள்ளாததேபோலும்.

ஐரோப்பாவில் இரு பாலாரும் சமத்வஉரிமை உடையவர்கள் இருக்கிறார்கள். ஆண் பாலார் தங்களை உயர்ந்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுவதில்லை. அப்படி சொன்னபோதிலும் அதை ஒப்புக்கொள்ளும் பெண் பாலரும் யாருமில்லை. தொழில் துறைகள் யாவற்றிலும் அவர்கள் புகுந்துவிட்டனர். தங்களுடைய புத்திக் கூர்மையினாலும் சாமர்த்தியத்தினாலும் பல துறைகளிலும் தலைசிறந்து விளங்குகின்றனர். மத சம்பந்தமான இலாக்காவும் இராணுவ இலாக்காவுந் தவிற ஏனைய அரசியல் பிரிவுகள் யாவற்றிலும் பெண் பாலர் அதிகத் திறமையாய் வேலை பார்த்து வருகிறார்கள். சமீபத்தில் அவர்கள் போலீஸ் டிபார்ட்மெண்டில் சேர்ந்து தெருக்களில் செல்லும் பெண்கள் குழந்தைகளின் பாதுகாப்புக்காகவும் விபசாரத் தடை செய்வதிலும் உதவி புரிந்துவருவது பெரிதும் பாராட்டத் தக்கது. பெரிய சர்வகலாசாலைகளில் professor களாகவும், போலீஸ் உள்பட்ட எல்லா டிபார்ட்டுமெண்ட்டிலும் அதிகாரிகளாகவும் இருந்துவரும் பெண்கள் கூடிய சீக்கிரத்தில் மத போதகாசிரியர்களாகவும் (Priests) ராணுவ வீரர்களாகவும் வந்து விடுவார்கள். என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. சென்ற வருஷத்தில் ஆதிக்கத்துக்கு வந்த தொழிற் கட்சியாரால் ஏற்படுத்தப்பட்ட மந்திரி சபையில் மார்கிறட் பாண்டு பீல்டு என்னும் மாது மந்திரியாக அமர்ந்திருப்பது மிகப் பொருப்புள்ள காரியங்கள். நிர்வகிப்பதிலும் ஆண் பெண் வித்தியாசம் சிறிதும் கவனிக்க படுவதில்லை என்பதை காட்டுகிறது.

இவ்வாறு இருபாலருக்கும் பலதுறைகளிலும் ஒருவித போட்டி யேற்பட்டிருப்பதின் காரணமாக மேல் நாட்டில் இல்லறவாழ்க்கை எவ்வாறு நடைபெறும்? அதிலும் தற்காலத்தில் மணவாழ்க்கையே புராதனமான தென்றும் நாகரீக மற்றதென்றும் கருதப்பட்டு வருகின்றது. இல்லற வாழ்க்கை புருஷனுக்கும் மனைவிக்கும் ஏற்பட்ட ஒப்பந்த நடவடிக்கையாகவே மதிக்கப்படுகின்ற தல்லாது, நம்மவர்களைப்போல் இம்மை மறுமை இன்பத்திற்கும் ஆத்ம வளர்ச்சிக்கும் ஒரு சாதனமாக கருதப்படுவதாகத் தோன்றவில்லை. வேதக்கோயிலுக்குச் சென்று மண வினை

முடித்துக்கொள்ளும் வழக்கத்திற்கு பதிலாக இங்கிலாந்தில் தற்பொழுது அனேகமாக Register பதிவு மணமே நடைபெறுகிறது. விவாக ரத்து செய்து கொள்ளுவதில் யாதொரு கணக்கு வழக்கு இருப்பதாகத் தெரியவில்லை. ஹிந்து வழக்கப்படி விவாக ரத்துக்கு இடமே யில்லை. தற்காலச் சட்டப்படி மனைவி புருஷர் தனித்தனி நீங்கி வாழ்வதற்கு மட்டும் உரிமை உண்டு. மேல் நாட்டில் புருஷர் பெண்ணை விலக்கி வைத்து விடுவதேபோல், பெண்களும் யாதொரு போலிக்காரணத்தை முன்னிட்டும் புருஷனை விலக்கிவிட வாதாடுகின்றனர். கணவனின் நடை யுடை பாவனைகள் பிடிக்கவில்லையென்றும், மூக்குவாய் செவிபிடிக்க வில்லையென்றும் விவாக ரத்துச்செய்ய மனுக்கொடுக்கும் மனைவிமார் மேல் நாட்டில் அதிகமுண்டு. நம் நாட்டில் கணவன் மனைவியை துன்புறுத்தியதாக கோர்ட்டில் நடபடிக்கைகள் நடப்பதைப் பற்றிக்கேட்டிருக்கிறோம். ஆனால் மேல் நாட்டில் மனைவியின் கொடுமை பொறுக்கமுடியாமல் வெட்கமின்றி விவாகரத்தை விரும்பும் ஆண்மக்களும் பலர் உளர்.

இந்நிலைமையில் குழந்தைகளின் பராமரிப்புக்காக பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வழியில்லை. நம் நாட்டைப்போலல்லாது மேல்நாட்டில் குழந்தைகள் தங்கள் பெற்றோர்களிடம் அன்றி பள்ளிக்கூட விடுதிகளிலும், Boarding house களிலுமே பெரும்பாலும் வளர்ந்துவருகிறார்கள். இவ்விடங்களில் அவர்கள் எவ்வளவு வசதியோடு வசித்துவந்தபோதிலும் பெற்றோர்களின் பார்வையில் வளர்ந்துவரும் குழந்தைகளைப்போல் அவர்களுடைய வாழ்க்கை செம்மைப்படுவதில்லை இப் பழக்கம் மிகுதியும் ஏற்பட்டுவிட்டதின் காரணமாக மேல்நாட்டாருக்கு வீடு, வாசல் என்ற இயைபு தொடர்பு யாதுமின்றி ஊர் ஊராய் திரிந்துகொண்டேயிருக்கும் நாகரீகமற்ற பண்டைக்காலத்தவருடைய நிலைமைக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். இதனாலேயேதான் மேல் நாட்டார் பல தேசங்களிலும் குடியேறி இருப்பதும் இன்னும் எங்குவேண்டுமென்றாலும் சென்று எக்காரியத்தையும் சுணிகாமாக முடிக்க தயாராய் இருப்பதும் என்க.

அடுப்பூதும் தொழில் பெண்களின் பிறப்புரிமையாக இந் நாட்டில் கருதப்படுகின்றது. மேல்நாட்டில் பெண்களைவிட ஆண்மக்களே இவ் வேலையைப் பெரிதும் மேற்கொண்டிருக்கி ருர்கள். இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய தேசங்களிலுள்ள பெரிய ஹோட்டல்களின் சமையக்காரர்கள் தங்கள் சமையல் வேலையைப்பற்றி பாராட்டிப் பேசிக்கொள்ளுவார்கள். நம் நாட் டிலோ ஆடவர்களுக்கு மடத்தொழில் இழிவென்று கருதப்படுவ தால் சமையற்காரர்கள் தாங்கள் சமையல் வேலை செய்கிறவர்க ளென்று வெளியில் சொல்லிக்கொள்ளவும் கூசுவர் மாமிச உணவே சமைக்கப்பட்டு வந்தபோதிலும் சமையல் அறை மிக வும் சுத்தமாகவும் யாதொரு அழுக்கு துற்நாற்றமும் இன்றி வைக்கப்பட்டிருக்கின்றது. எவ்வளவு அகன்ற இடமாயிருப்பி னும் எவ்வளவு குறைந்த நபர்களுக்கு சாப்பாடு தயார் செய்யப் பட்டபோதிலும் நம் வீடுகளில் சமையலறை, கரியும் தண்ணீரும் அழுக்கும் குப்பையுமாய்விடுகின்றது. மேல்நாட்டு ஹோட்டல் களில் மிகச் சுருங்கிய இடத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்களுக்கு புலால் உணவு தயார் பண்ணப்பட்டுவரும் இடத்தின் அழகையும் ஒழுங்கையும் சுத்தத்தையும் பார்த்தால் நாம் ஒருங்கே ஆச்சரிய மும் வெட்கமும்பட வேண்டியதாயிருக்கிறது. (தொடரும்)

---

## தாய் நாடு தரித்திரப்படும் மூன்று கொள்கைகள்.

(நாங்குனேரி, சு. அருணசலம்பிள்ளை எழுதியது.)

பாரத மைந்தீர் !

நம் தாய் நாட்டின் தரித்திர திசைக்கு காரணம் பல்வாம். அவற்றுள் நம்மவர் பாரியரிருக்கப் பரத்தையை நாடிப் பணத்தை இழந்து பரிதவிக்கும் பான்மைபோன்று ஊண், உடைகளில் அயல் நாட்டாரைப்பின்பற்றி அறிவழிவதும், அவர் தம் பகட்டுப் பொருள்களின் பாசத்தால் காசைப் போக்கி மோசம் போ வது மாய முச்செய்கைகளையும் முறையே சிறிது சிந்திப்பாம்.

1. அந்தோ! பெரியார் முதல் சிறியாரீறாய் பாரத நாட்டின் பண்டைப் பானத்தைப் பழித்தனர். காலை மாலை காப்பி பானமே கருத்துக் குகந்ததாய்க் கண்டனர். கட் குடியர் மயக்கம் போன்று கணக்கிழந்து கடும்பிணிவாய்ப் பட்டுக் கலங்கவுமாயினர். இதற்கு பலத்தையும் நலத்தையு மளிக்கும் நம்முன்னோர் ஆகார முறை அடாது போகவே, ரொட்டி, பிஸ்கோத், போழி, போண்டா, பகழுபாத், பதிர்பேணி, பகோடா, ஸேமியா, ஸோமாஸி, சிலேபி, சித்ரான்னம் முதலிய பலகார வகைகள் பல புறப்படலாயின. ஆகவே ஆடவர் வீட்டை விட்டனர்; விடுதி மேலே (Coffe Hotal) நாட்டம் கொண்டனர்; நம் நாரியர் பணியையும் பழித்தனர்; விளக்கொளி வேண்டாது விசித்திர ஒளி விரும்பி விழி இழப்பார்போன்று நிதி இழந்து நிற்கவும் சக்தியற்றனர்.

2. பட்டு வஸ்திரத்தினும் பருத்தி வஸ்திரம் மேலென்பது பழக்க வழக்கத்திருப்ப, பட்டு வஸ்திரமே மேலாய்க் கண்டனர். பல சுபகாரியங்களிலும் அவற்றைப்பரிசுத்தமானதாய்க்கொண்டனர். ஆகவே ஆடம்பரத்தில் ஆசைகொண்டு பாரத நாட்டின் பணத்தைப் பாழாக்கிப் பரிதவிக்கவுமாயினர். இதனில் ஜீவ காருண்யமே முதன்மையாய்க் கருதும் நம் முன்னோர் மொழி மாறுபட்டுக் காண்பதும் காலத்தின் கோலமேயாம். அன்றி நாட்டுப் பருத்தியால் நமக்குகந்த நாலு முழத் துணி பல நாமே நலம்பெற நெய்து உடுத்தல் விடுத்து, ஷர்ட், கோட், டை, காலர், டிரௌசர் என்னும் அன்னிய நாட்டு ஆபாச உடைகளில் ஆசைகொண்டு காசைப் போக்கி மானத்தைக் காக்க மற்றத் தேயத்தாரை எதிர்பார்த்து ஏங்கி நிற்பதும் என்னே! என்னே! இதனால் அயல் நாட்டார் வாணிபம் வலுத்து வழம்பெற்றது. கைத்தொழில் மிகுத்து கனம் பெற்றது. தாய் நாடோ உண்ண உணவிற்கும் கட்டக் கந்தைக்கும் கதியற்று அடிமையாய் நின்று அல்லற்படலாயிற்று.

3. இனி பிறதேசத்து, கண்ணைக் கவரும் கண்ணாடிப் பொருள்கள், காலங்காட்டும் கருவிகள், ஞாலம் சுற்றும் வாகனப் பொருள்கள், பாலர்க்குதவும்பலவகைப் பொருள்களாய பகட்டுப்

பொருள்களோ, நம் மதியை மயக்கி நிதியை இயக்கி நாடு நல்குரவுற்று நலியச்செய்வதில் எதற்கும் முற்பட்டு நிற்பதாம். ஏனெனில் அற்ப வருவாயையும் அவ்வாடம்பரப்பொருள்கள் அனுகூலமும் அவசியமும் காட்டி அளவற்ற பொருளை அயல் நாட்டாரை அள்ளிப்போகச் செய்வது கொண்டேயாம். ஆகவே மாந்தர், அணுமேருவாதலும், பல துளி பெரு வெள்ள மாதலும் அறியாராய், சிற்பியர் சிந்தை கலங்கினர். செய் தொழில் மறந்தனர். செல்வ மிழந்து தீப்பிணி வாய்ப்பட்டு திண்டாடவு மாயினர்.

தாய்நாட்டீர் !

இவ்வாறு தன்னைப்பெற்ற ஆத்தாள் கிண்ணிப்பிச்சை எடுக்க தனயர் கும்பகோணத்தே கோதானம் செய்யக் காண்பதே போல், தாய் நாடு தரித்திரத்தால் நலிபவும் அன்னிய நாடுகள் அளகாபுரியா யிலங்கவும் காரணமாய முக்கொள்கைகளையும் முறையே சிந்தித்து முன்னோர் செய்கையில் சிலாக்கியமாயதைக் கொண்டு தேசம் செல்வத்தால் சிறந்தோங்கும் வகையே முற்படுவீராக. ஆக்கவும் அழிக்கவும் வல்ல ஐயன் அடியார் இதையத்துள் நின்று ஒற்றுமை காட்டி உய்விப்பானாக.

---

## வேளாளர் நிலைமை.

திரு. இ. வெண்ணிமாலை பிள்ளையவர்கள், B. A., B. L.,

(முன்தொடர்ச்சி.)

அவ்விதம் பல மொழிகளிலும் புதிய முறைகளைக் கண்டு வெளிவரும் நிலநூல், ஆடு, மாடு வளர்ப்பு நூற்கள், பால், வெண்ணெ சேகரிப்பு நூற்கள் முதலிய பல நூற்களையும் நாம் அப்போதைக்கப்போது உழவர்களுக்கு பயன் பயக்குமாறு தமிழில் மொழிபெயர்க்கவேண்டும். ஆனால் மொழிபெயர்த்து வெளியிடுவதோடு நின்றுவிட்டால் எல்லோருக்கும் பயன் கொடுத்தவர்களாகோம். என்னை ஊதியங் கருதாது வெளியீடுகள் வெளிவரினும் அடக்கவிலைக்காவது அவைகளை விற்கவேண்டுமன்றோ?

எனின், பொருள் கொடுத்துப் புத்தகம் வாங்கித்தானே புதிய முறைகளைத் தெரியவேண்டியிருக்கிறது. அவ்விதம் பொருட் செலவு செய்ய நம்மில் அநேகருக்கு நாணயத் திறனிருக்கிறதா? இல்லையே ஆதலால் அவைகளை ஏழைக் குடியானவனுக்கும் பணச்செலவின்றி அல்லது வெகு சொற்பச் செலவில் படித்தறி யும்படி செய்வதற்கு நாம் வழிகள் தேடவேண்டும்.

அதற்கேற்ற வழி ஊர்தோறும் பொது நூல் நிலயங்களை நிறுவுவதே. விவசாயிகள் அனைவருக்கும் மொழிபெயர்ப்பு வெளியீடுகள் பயன் பயக்கவேண்டுமானால் பட்டிகள்தோறும் பொதுநூல் நிலயங்கள் இருக்கவேண்டும். அந் நிலயங்களில் இந் நூற்களைத் தருவித்து இலவசமாகவோ, சொற்ப கட்டணத் தின்பேரிலோ எல்லோருக்கும் பயன்படும்படியாய் படிக்கக் கொடுத்துதவ வேண்டும்.

இப்பொது நூல் நிலய இயக்கத்தில் நம்மவர்கள் இன்னும் ஈடுபடவில்லை. பொது நூல் நிலயங்களால் மக்களடையும் பயன் களை நாம் இன்னும் கண்டுகொள்ளவில்லை. மேனாட்டாரின் ஏற் றத்துக்கு அவைகளையே அடிப்படைக் காரணமாயுங் கொள்ள லாம். ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களில் பட்டினமென்றும் பட்டியென்றும் பாகுபாடில்லாது நாடெல்லாம் நிலயங்கள் மயமா யிருக்கின்றன. அந்நாடுகளில் தக்நயங்கருதாத் தனிகர்கள் அநேகர் ஆங்காங்கே இந்நிலயங்களை நிறுவியிருக்கிறார்கள். ஸ்கொத்லாந்து தேசத்தவரான கார்னிஜீ (Carnegie) என்ற பெரியார் ஒருவரால் மட்டுமே அந்நாடுகளில் நிறுவப்பட்டுள்ள நூல் நிலயங்கள் ஆயிரக் கணக்கா யிருக்கின்றன. கார்னிஜி கனவானின் தாய்நாடாகிய ஸ்கொத்லாந்து தேசத்திலோ அன்னால் ஊர் தவறாது நூல் நிலயங்களாய் விதைக்கப்பட்டிருக்கிறது. மேனாடுகளில் இவ்வியக் கம் பாவி நாட்டாரும் அதன் பலனை கடந்த நூறு வருஷங்க ளுக்கு மேலாகவே அனுபவித்து வருகிறார்கள். நாமோ இன் னும் இவ்வியக்கத்தையே அறிந்தபாடில்லை. அரசாங்கத்தாரும் இதுவரை இவ்வியக்கத்தைப் பரப்புவதற்குத் தக்க முயற்சிக ளெடுத்தார்களில்லை. இப்பொழுதுதான் அவர்கள் அதில் சற்றே

கவனம் செலுத்துகிறார்கள். "நாமும் அரசாங்கத்தார் பக்க உதவியை வைத்துக்கொண்டாவது இனித் தாமதிக்காது ஊர் ஊராய் நூல் நிலையங்களை நிறுவ முயற்சிக்கவேண்டும்."

இவ்விதம் நூல் நிலயங்கள் வாயிலாய் மொழிபெயர்ப்பு நூல்களை ஊாரெல்லோருக்கும் உதவுவதால் உழ்வர்களுக்கு உழவில் ஊதியமதிகரிக்க பல்வேறு நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் பல்வேறு புதிய வழிகளும் அவ்வப்போது தெரிந்துவிடுகிறது.

இனி இவ்விதம் புதுப்புது முறைகளைப் படித்தால்மட்டும் பயனில்லை. அவைகளைக் கற்றதன் பலனுப் நாம் கையாடும் உழவு முறைகளையும் சிறுத்த செலவில் பெருத்த வருவாய் பெறுமாறு ஆங்காங்கே திருத்தவும் வேண்டும். நவீனமுறைகளால் நலனெய்துவோமெனில் பழையன கழைந்து புதியன ஏன் கொள்ளலாகாது? என் பாட்டன் முப்பாட்டன் செய்துவந்த முறையை நான் மாற்றுவது எங்ஙனம் என எழும் திகைப்பு ஞானமில்லாதது அடிமைத்தனத்தில் கட்டுண்ட குறுகிய மனத்தின் காரணமாய்ப் பிறக்கும் மடைமையே அதற்குக்காரணம். ஆகலால் வேளாண்மை முறைகளில் புதிதாய் வெளிவருபவைகளை ஆராய்ந்து அவைகள் நமக்கு உழவில் ஊதியம்பயக்குந்தகையவாயவெனில் அவைகளைக் கைப்பற்றவேண்டும்.

வேளாளர் விவசாயத்தில் நவீனமுறைகளைக் கற்று அவைகளைக்கையாட முயலவேண்டுமென்றோம். நாடோடிய பழக்கத்தில் பொதுவாய் எதையும் கற்பதில் கஷ்டமிராது. கற்றதைக் கையாட முயலும் பொழுதுதான் எதிர்பாராத பலவிடங்களிலிருந்தும் அதற்கு இடஞ்சல்கள் ஏற்படும். வேளாண்மையிலும் அதன் நவீன முறைகளைக் கற்பது ஒருவாறு எளிதென்றே சொல்லலாம். ஆனால் அம் முறைகளைப் பழக்கத்துக்குக் கொண்டு வருவது அத்துணை எளிதாய் முடியக்கூடியதல்ல. பல்லாண்டுகளாய்ப் பற்றியிருக்கும் பழய முறைகளைக் கைவிடுவதென்றால் அதற்கென விசேஷ மனத் திடமில்லையேல் முடியாது.

நாமோ வாழ்க்கையின் நானுவிதத் துறைகளிலும் பழமையைத் தெய்வத்தின்மேலாக் கொள்ளும் வழக்கத்தார். எனவே பயிர்செய் முறை, நிலச் செப்பன் வகை முதலிய விவசாய முறைகளில் பழமையைக் களைந்து புதியன புகுத்தவேண்டுமானுல் விசேஷ மனவலியும், உறுதியும், ஊக்கமும் உழவர்களுக்கிருத்தல் வேண்டும். கருமமே கண்ணுய், எவ்வெவர் ஏளனத்தையும் மேற்கொள்ளாது, நன்றென நானறிந்த வழியை, ஏனையர் எவ்விதம் பழிப்பினும் பழிப்புக்குப் பதருது செய்தே தீருவேனென்னும் மனவுறுதியும் ஊக்கமுமுள்ள உழவனே புதியன புகுத்துவானுவான்!. அவன்போன்றவர்களாற்ருன் பயனற்ற பழமையை நீக்க முடியும்.

ஆனுல் இம்மனப்பான்மை ஒருவனுக்கு இலகுவில் வரக்கூடியதன்று. அப்படியே அது ஒருவாறு அமையினும், புதிய முறைகளைப்பழக்கத்துக்குக்கொண்டு வருவதற்கு மனப்பான்மையிருந்தால் மட்டும் போதாது. மனப்பான்மை அதற்கு அடிப்படையெனினும், முழுமையுமாகாது. என்னே? மனமுண்டானுல் இடமுண்டு என்பது, ஒருவகையில் உண்மைதான். ஆனுல் உலகில் எக்காரியமும் பொருளில்லையேல்கைகூடாது: பொருளில்லார்க்கிவ்வுலகமில்லையன்ருே! விவசாயத்தில் புதியமுறைகளைக் கைக்கொள்ளுவதிலும் முதலில் பொருட்செலவு ஏற்படும்; முறைகளும் ஆரம்பத்தில் தகுந்த வருவாய்காண்பிக்காமற்போனுலும் போகலாம். இவற்றையெல்லாம் பொருட்படுத்தாதிருக்க ஒருவனுக்குப்போதிய பணம் வேண்டும். எனவே புதியமுறைகளை அனுட்டிக்க நினைக்கும் வேளாளனுக்கு முதலில் மனம் வேண்டும்; அதன் பின் போதிய தனம் வேண்டும்.

---

## சுருட்டுப் பிடிப்பதன் தீமைகள்.

ரேவரேன்ட் ஜே. பி. ஆக்டன் என்பார் பின்வருமாறு எழுதுகிருர்:

சுருட்டுப் பிடிப்பதனுல் எவ்வித நன்மையும் உண்டாகாது. இதுவரை அஃது எவர்க்கும் நன்மைசெய்யவில்லை. அதனுல் நன்

மை உண்டாவதாகக் கூறப்படுவதெல்லாம் வெறுங் கற்பனையே யாகும். மதுபானம் செய்வது, அபினி தின்பது இவைகளுக்கு என்னென்ன சமாதானங்கள் கூறப்படுகின்றனவோ அதே சமாதானங்கள் இதற்கும் கூறப்படுகின்றன. புகையிலையில் ஒரு கொடிய விஷம் இருக்கிறது. அதனை உட்கொள்வதனால் இருதயம், மெல்லிய நரம்புகள், சுவாசப் பை, வாய் முதலியவைகளைக் கெடுத்துவிடுகிறது. தேகத்தின் பொதுவான பலத்தையே குறைத்து வியாதிகளை எதிர்த்து நிற்கும் சத்தியைக் குறைத்துவிடுகிறது. புலன்களையும் உணர்ச்சிகளையும் மந்தப்படுத்தி மனிதனின் ஒழுக்க நிலையையும் குன்றச்செய்துவிடுகிறது. புகையிலையை எந்தவிதமாகவேனும் உபயோகிக்கும் பெற்றோர்களின் சந்ததியாருக்கு, அக்கொடிய வழக்கம் எப்படியாவது வந்துவிடுகிறது.

தவிர ஒருவன் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகச் சுருட்டு முதலியவைகளைப் பிடிக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவனுடைய ஆவலும் அதிகரிக்கிறது. சுருட்டுப் பிடிக்கும் பழக்கத்தை ஒருமுறை அப்பியசித்துக்கொண்டால் பிறகு அதனை விடுதல் பெரிதும் கடினமாகும். லாகிரி வஸ்துக்களை உபயோகியாதவன் என்றைக்கும் சுந்திர புருஷனேயாவன். சுருட்டுப் பிடிக்கிறவன், பணத்தைச் சுட்டெறிக்கிறான் என்றே கொள்ளவேண்டும். புகையிலை வியாபாரிகள் வருஷந்தோறும் ஏராளமான இலாபம் பெறுவதற்குக் காரணர்களாயிருப்பவர் யார்? விளம்பரத்திற்காக வருஷத்தில் லட்சக் கணக்காக பவுண்கள் செலவழிக்கப்படுவதற்குப் பொறுப்பாளிகள் யார்? புகையிலைப் பழக்கமுடையவர்களே. இவர்கள் தங்களுடைய பணத்தை வீணாகச் செலவழித்து, தங்கள் தேகசுகத்தைக் கெடுத்துக்கொள்கிறார்கள். புகையிலை வியாபாரிகள் வெளி விளம்பரங்கள், மனிதர்களின் கீழான உணர்ச்சிகளைக் கிளப்பிவிட்டு அவர்களைத் தீய பழக்கங்களில் கொண்டு சேர்க்கின்றன.

சுருட்டுப் பிடிப்பவர்கள் பிறருக்கு வெறுப்பு உண்டாகும்படியாக நடந்து கொள்கிறார்கள். தங்களுடைய துணிகளும்,

தாங்கள் விடும் மூச்சும் எவ்வளவு துர்நாற்றம் வீசுகின்றன என்பதை அவர்கள் உணர்வதில்லை. சுருட்டுப் பிடிப்பவர்கள் தங்கியுள்ள இடத்தைச் சுற்றியிருக்கும் நல்ல காற்றும் கெட்டுவிடுகிறது. இதனால், இவர்கள், பிறருடைய உணர்ச்சிகளை மதித்து நடக்கக்கூடிய சக்திகளை இழந்து விடுகிறார்கள். சுருட்டுப் பிடிப்பவர்களில் நூற்றுக்கு 99 பேர், எந்த இடத்தில், கூட்டத்தின் மத்தியில் இருந்த போதிலும், தங்களுடைய காரியத்தைத் தொடங்கிவிடுவார்கள். பிறருக்கு இதனால் தீங்குண்டாகுமே யென்பதைப்பற்றி இவர்கள் சிறிதும் நினைப்பதில்லை. புகையிலை விஷத்தினால் ஆண்களை விடப் பெண்களுக்கே அதிக தீமை உண்டாகிறது. ஸ்திரீகள் இந்த துர்ப்பழக்கத்தை அப்பியாசிக்கத் தொடங்கினார்களானால் வருங்கால சந்ததியார் பலவித தீமைகளுக்குட்பட நேரிடும் என்பதில் ஐயமில்லை.

ஆண்டவன் தங்கியிருக்கும் கோயிலாக ஒவ்வொருவரும் தங்கள் தேகத்தைக் கருதவேண்டும். ஆண்டவன் வசிக்கு மிடத்தை அசுத்தப் படுத்தக் கூடாது. ஆனால் புகையிலையை உபயோகிக்கும் ஒவ்வொரு வரும் இந்த அசுத்தத்தைச் செய்கிறவர்களே யாவார்கள். இவர்கள், சுத்தமான மனச்சாட்சியை வைத்துக் கொண்டிருக்க முடியாது. புகையிலையை உபயோகிக்க எனக்கு உரிமையில்லையா வென்று ஒவ்வொருவரும் கேட்கலாம். ஆனால் அதனால் பிறருக்குத் தீங்கு உண்டாகிற தென்றால் அதனைவிட்டு விடுதலே வேண்டும். சாதாரணமாக மதுபானஞ் செய்கிற ஒவ்வொருவரும் புகையிலை உபயோகிக்கும் வழக்கத்தைப் பார்க்கலாம். மதுபானம் உபயோகிப்பதை இப்போது எல்லாத் தேசங்களும் எதிர்த்து வருகின்றன. புகையிலைக்கு மட்டும் இன்னும் மரியாதை வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதனுடைய முடிவு காலமும் விரைவில் வந்து விடும் என்பதில் ஐயமில்லை.

---

இரண்டாவதாண்டிற்காவது இரண்டாயிரஞ் சந்தாதார்கள் சேர்ந்து ஆதரித்தால் வேளாளனின் சந்தா ரூபாய் ஒன்றாகக் குறைத்து விடலாம். இஃது உறுதி.

## திருக்குறள் மூலமும் உரையும்.

திரு. பொ. முத்தைய பிள்ளையவர்கள்

### இல்லற இயல்.

அஃதாவது, இல்லாளோடு கூடியிருந்துகொண்டு செய்யப்படும் அறத்தினைக் கூறும் பகுதி. இல்லாளோடு இருந்தும், இல்லாளைத் துறந்தும் அறஞ் செய்யலாம். அவ்விரு நிலைகளுள் இல்லாளோடு வாழும் நிலையே முதலென்பது, துறவு என்பதனாலேயே பெறப்படும். ஆதலின், இல்லறம் முதற் கண் வைக்கப் பட்டது.

### ரு-ம் அதிகாரம்.—இல்வாழ்க்கை.

அஃதாவது, அறஞ் செய்தற்குத் துணையாகிய இல்லாளோடு இருந்து அறஞ் செய்து வாழ்தலின் சிறப்பு. நான்காம் அதிகாரத்தால் நூலிலே சொல்லப்படும் பொருளாகிய அறன், வலியுடைத்தென்பது கூறி, இவ்வைந்தாம் அதிகாரத்தால் அவ்வறத்துள் முதலாவதான இல்லறஞ் செய்தற்குத் துணையாகிய இல்லாளோடு இருந்து அறஞ் செய்து வாழ்தலின் சிறப்புக் கூறுதலின் அதிகார இயல்பு பெறப்பட்டது. சிறப்பு அனைவருக்குந் துணையாதல்.

சக. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

(இ-ள்.) இல்லாளோடு இருந்து அறஞ்செய்து வாழ்பவன் என்று சொல்லப்படுபவன், இல்லறம்போன்று அற இயல்புடைய ஏனை மூவர்க்கும் அவருடைய நல்லொழுக்கம் நிலைபெறுதற்குத் துணையாவன். (எ-று)

இல் என்பது இல்லாளோடு இருந்து அறஞ் செய்தலைக் குறித்தது. என்பான்-என்று சொல்லப்படுபவன். ஏனை மூவராவார்-பிரமசாரியும், வானப்பிரத்தனும், சந்நியாசியுமாம். பிரமசரியமாவது-குருவினிடத்திலிருந்து நூல் பயில்தலும் விரதங் காத்

தலுமாகிய நிலை. வானப் பிரத்தமாவது-மனையாளைத் துறந்து வனத்திற் சென்று தவஞ் செய்யும் நிலையும், மனையாளோடு கூட வனத்திற் சென்று மனையாள் பணி செய்யத் தவஞ் செய்யும் நிலையுமென இரு திறப்படும். சந்நியாசமாவது-எல்லாவற்றையும் முற்றத் துறந்து ஞான நிட்டை புரியும் நிலை. இந் நூலாசிரியர் இல்லறம் துறவறம் என்னும் இருவகை அறமே பொதுவாகக் கூறப் புகுந்தாராயினும், பிரமசரியம், வானப்பிரத்த மென்னும் இருவகை அறநிலைகளையும் சிறப்பாகக் கூறினர். கூறவே, இந் நான்கு நிலைகளைக் கொள்ளும் சமயத்தவர் திருவள்ளுவரென்பது பெறப்படும். துறவற நிலையுடைய மூவரும் பசியாலும் நோயாலும் குளிர் முதலியவற்றாலும் வருந்தாமல், உண்டியும் மருந்தும் இடம் முதலியனவும் உதவி, அவரவர் ஒழுக்க நெறியில் தவறாது நிற்கச் செய்பவன் இல்வாழ்வானாதலின், அம் மூவர்க்கும் இவன் நல்லாற்றின் நின்ற துணையென்றார். (க)

சஉ. துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை.

(இ-ள்.) காக்கத்தக்கவரால் கைவிடப்பட்டுத் துறந்தவர்க்கும், உணவின்றி வந்து இரப்பவர்க்கும், ஒருவருமின்றித் தன்னிடம் வந்து மாணமடைந்தவர்க்கும், இல்வாழ்வானென்று சொல்லப்படுபவன் துணையாவன். (எ-று.)

முதலாவது செய்யுளில் இயல்புடைய மூவரென்றமையால் காக்கப்படுபவரைக் கைவிட்டுத் துறந்த சந்நியாசி கூறப்பட்டாராதலின், இச்செய்யுளில் துறந்தாரென்பது காப்பவரால் கைவிடப்பட்டுத் துறந்தவரைக் குறித்தது. அவர்க்குப் பற்றுக்கோடாயிருந்து நல்லறிவு புகட்டி வேண்டுவன செய்தலானும், உணவின்றி வருந்துவோர்க்கு உணவு கொடுத்தலானும், ஒருவருமின்றி வந்து மாணமடைந்தவனுக்குத் தகன முதலியன செய்து அவ்வுயிரை நல்லுலகின்கண் செலுத்துதலானும் துணையென்றார். (உ)

சங. தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தான் என்றாங்கு
ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை.

(இ-ள்.) பிதிரர் தேவர் விருந்தினர் சுற்றத்தார் தான் என்று சொல்லப்பட்ட ஐந்து இடத்தும் செய்யப்படும் அறநெறியை வழுவாமற் செய்தல் இல்வாழ்வானுக்குத் தலையாய அறம். (எ-று)

பிதிரரென்பவர்-இறந்துபோன பிதா மாதாக்களல்லர். இறந்தவர்களின் பொருட்டுச் செய்யப்படும் சிராத்த முதலிய தரும பலன்களை அவர்கள் வசிக்குமிடத்தில் அவர்களுக்குச் சேர்க்குந் தொழிலுடைய தேவ வகுப்பினர். இவர் தென் திசையில் வாழ்தலின் தென்புலத்தா ரெனப்பட்டார். ஏனைத் தேவர்கள்போல இப் பிதிரரும் அயனால் படைக்கப்பட்டவராவர். விருந்து என்னுஞ் சொல்லின் பொருள் புதுமை யென்பதாம். அது புதியராய் வந்தவரைக் குறித்தது. அவர், முன் வந்து பழகினமை குறித்து வந்தவரும் பழக்கமின்றி வந்தவருமென இரு திறப்படுவர். இவர், யாத்திரையாகச் செல்பவராதலின் அடுத்தடுத்து வரினும் புதிதாய் வந்தவரேயாவர். விருந்தினர் வேறு, சுற்றத்தார் வேறு. ஒக்கலென்பவர் சுற்றத்தார். இவர் புதிதாய் வரினும் உறவுபற்றி வந்தவராதலின் புதியராகார். தான் நிலை பெற்று நின்று எல்லா அறங்களையுஞ் செய்ய வேண்டுதலின், தன்னை ஓம்புதலும் அறனாயிற்று. இவ்வாறு ஐந்திடத்தும் அறஞ் செய்ய வேண்டுதலின், அரசனுக்குச் செலுத்தவேண்டிய இறைப்பொருள் ஆறிலொன்றாயிற்று. (௫)

௪௪. பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்.

(இ-ள்.) பாவத்திற்கு அஞ்சிப் பொருளைச் சேகரித்து மேலே கூறப்பட்ட பத்து இடத்தும் பகுத்துண்டலை ஒருவனுடைய இல்வாழ்க்கை பொருந்துமாயின், அவனுடைய வழி இவ்வுலகத்தில் எக்காலத்தும் நிலைபெற்று நிற்றல் அல்லது இறத்தலில்லை. (எ-று)

பத்து இடங்களாவன—பிரமசாரி, வானப்பிரத்தன், சந்நியாசி யென்னும் மூவரும், துறந்தார், துவ்வாதவர், இறந்தார்

என்னும் மூவரும், தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் என்னும் நால்வருமாகிய பரின்மர். தென்புலத்தார் முதலிய நால்வருக்கும் தனக்கும் ஐந்து கூறு வைத்து அரசனுக்கு ஆறி லொன்று வரிச் செலுத்துவதாயின், பிரமசாரி முதலிய அறு வருக்கு உதவி புரிதல் எவ்வாறு கூடுமெனின், கூறுதும். இல் வாழ்வான் செய்யத்தகும் அறம், ஒவ்வொருவரும் தனித்தனி செய்யத்தக்க தலையாய அறமென்றும், பலரும் சேர்ந்து செய்யத் தக்க துணையாய அறமென்றும் இரு வகைப்படும். இக் கருத் துத் தோன்ற தென்புலத்தார் முதலியோரைக் கூறுமிடத்துத் தலை யென்றும், பிரம்சாரி முதலியோரைக் கூறுமிடத்துத் துணையென் றும் ஆசிரியர் அருளிச் செய்தனர். துணையாய அறத்தைத் தன் கூறில் எஞ்சியது கொண்டு இயன்றவாறு செய்யலாம். பிச்சை யிடுதற்கென்று சேர்த்துச் சமையல் செய்யாமலே பிச்சையிடுத லாலும், வாங்குபவர் பலரிடத்துஞ் சென்று பெறுதலாலும் இவ் வுண்மை துணியப்படுமென்க. பாவத்தால் வந்த பொருளைக் கொண்டு அறஞ் செய்யின், அறம் பொருளுடையாரையும் பாவம் தன்னையுஞ் சார்ந்து தன் வழி அழிந்துவிடுமாதலின், பழியஞ்சி யென்ஞர். வாழ்பவன் உடையனுயின் என்று கூறவேண்டுவதை, வாழ்க்கை மேலேற்றிக் கூறினர். (௪)

௪௫. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது.

(இ—ள்.) மனையாளிடத்து அன்பையும் பகுத்துண்டலா கிய அறத்தையும் ஒருவனுடைய இல்வாழ்க்கை உடையதாயின், அவ்வுடைமை அவ்வில்வாழ்க்கைக்குப் பண்பும் பயனுமாகும். (எ.—று.)

மனையாளிடத்து அன்புடைமை இல் வாழ்க்கைகுப் பண் பும்; அறனுடைமை பயனும் என்க. பண்பாவது—இல்லறஞ் செய்தற்குரிய உரிமை. மனையாளிடத்துக் கணவனுக்கு அன்பு இல்லையாயின் கணவன் செய்யும் அறத்திற்குத் துணையாக அவள் உதவி செய்யாள். அதனுல் அறம் நடைபெருது. ஆகையால்

இல்லறஞ் செய்பவன் மனையாளிடத்து அன்புடையனாதல் இன்றியமையாதது. (ரு)

சகூ. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவது எவன்.

(இ.—ள்.) அறத்தின் வழியே ஒருவன் இல்வாழ்க்கையை நடத்துவனாயின், அவன் இல்லறத்திற்குப் புறமான துறவறநெறியிற் சென்று பெறும் பயன் யாது? ஒன்றுமில்லை. (எ.—று)

அறத்தின் வழியாவது—மேற்கூறியவாறு பழியஞ்சிப் பொருளீட்டிப் பகுத்துண்டலும் மனையாளிடத்து அன்புடைமையுமாம். துறவறநிலையாலடையும் பயனையும் கருத்து ஒத்த மனையாளோடு இருந்து பெறலாமாதலின், புறத்தாற்றில் போய்ப் பெறுவது எவன் என்றார். (சூ)

சஎ. இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை.

(இ-ள்.) இல்லறத்திற்கு உரிய இயல்போடு கூடி இல்வாழ்க்கையிலிருந்து வாழ்பவன் என்று சொல்லப்படுபவன், புலன்களை விட முயலுகின்ற துறவிகள் எல்லாருள்ளும் மேலானவன் (எ-று)

புலன்களை விடுதற்குச் செய்யப்படும் முயற்சி தியானம், யோகம், சமாதி யெனப் பல திறப்படுதலின் எல்லாருள்ளும் எனவும், புலன்களை அநுபவித்துக் கொண்டே விட்டவரெய்தும் பயனை அடைதலின் தலை எனவுங் கூறினார். (எ)

சஅ. ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து.

(இ-ள்.) துறவற நெறியில் நிற்போரைப் பசி முதலிய இடையூறு நீக்கி அவரவர் நெறியில் வழுவாது ஒழுகச்செய்து தன்னுடைய அறத்தினுந் தவறாத இல்வாழ்க்கையானது, துறந்து தவஞ்செய்வார் நிலையினும் மேலான தவ நிலையுடையது. (எ-று)

தவஞ்செய்வார், தமக்கு உற்ற பசி முதலிய நோய்களைப் பொறுத்தலேயன்றிப் பிறர்க்கு உற்ற பசி முதலியவற்றைப் பொறுத்தலில்லை. இல்லறத்தில் நிற்பவன், தனக்குரிய பசி முதலியவற்றையும் தவஞ் செய்வார்க்குரிய பசி முதலியவற்றையும் பொறுத்துத் தீர்க்கின்றானாகலின், நோற்பாரின் நோன்மை யுடைத்து என்றார். நோன்மை-பசிமுதலியவற்றைப் பொறுக்கும் தவநிலை. (௯)

௪௰. அறன் எனப்பட்டதே யில் வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பது இல்லாயின் நன்று.

(இ-ள்.) இல்லறம் துறவறமென்னும் இருவகை அறத்தினும் நூல்களால் அறனென்று சிறப்பித்துச் சொல்லப்பட்டது இல் வாழ்க்கையேயாம். ஏனைத்துறவறமும் பிறனால் பழிக்கப்படுதலில்லையாயின் இல்லறத்தோடு ஒத்து அறன் எனப்படும். (எ-று.)

ஏகாரத்தை இல் வாழ்க்கை என்பதனோடு கூட்டுக. அந்த ஏகாரம் துறவறத்தைப் பிரிக்கும் பிரிநிலைக்கண் வந்தது. ஆகையால், அஃது என்பது துறவறத்தைச் சுட்டிற்று. இவ்வாறன்றி ஏகாரத்தைத் தேற்றமாக வைத்து, அஃது என்பது இல்வாழ்க்கையைச் சுட்டினதாகக் கொள்ளின், நன்று என்பது பயனில்லாத சொல்லாய்விடும். பிறனால் பழிக்கப்படுவது, துறவறத்தோடு பொருந்தாத கூடா வொழுக்கம். மனத்தையும் பொறிகளையும் அடக்க வேண்டாது தனக்குரிய ஐம்புலன்களை அநுபவிக்கும் இல்வாழ்க்கை அறமெனப்படுமாறு போல, அவற்றை அடக்க வல்லதுறவே அறமெனப்படும்; அடங்காத துறவு அறமெனப்படாது என்பது கருத்து. (௰)

௫௰. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்.

(இ-ள்.) இவ்வுலகத்தின்கண் இல்லறத்தோடு கூடி வாழ்பவன் போல வாழ்பவன், தேவ லோகத்தி லிருக்கும் தேவருள் ஒருவனாக நன்கு மதிக்கப்படுவன். (எ-று)

ஆங்கு-போல, இவ்வுலகித்தைத் துறந்த பின்னர், தேவனுய் இல்லறத்தின் பயனை அநுபவிப்பது நிச்சயமாதலின், தெய்வத் துள் வைக்கப்படுமென்றார். (௫௦)

இவ்வதிகாரத்தில், முதல் இரண்டு செய்யுட்களால், இல் லறத்தில் வாழ்பவன் பிரமசாரி முதலிய அறுவருக்குந் துணையாய் நின்று உதவிபுரிய வேண்டுமென்பதும், மூன்றுவது செய்யுளால் பிதிர்க்கடன் முதலியவற்றைத் தனித்தனி செய்யவேண்டுமென்ப தும், நான்காவது செய்யுளால் அறஞ் செய்தற்கு வேண்டப் படும் பொருளை பழியஞ்சி ஈட்ட வேண்டுமென்பதும், ஐந்தாவது, செய்யுளால் அறஞ் செய்தற்குத் துணையாகிய மனையாளிடத்து அன்புடையனுதல் வேண்டுமென்பதும், ஆறுவது செய்யுளால் அறநெறியில் இல்லறம் நடாத்துவோனுக்குத் துறந்து பெற வேண்டிய பயன் ஒன்றுமில்லையென்பதும், ஏழாவது செய்யு ளால் துறந்தவரினும் மேலாவனெனன்பதும், எட்டாவது செய்யு ளால் மேலாதற்குக்காரணம் துறந்தவரை இடையூறுபுகாமல் காத் து நல்வழியில ஒழுகச் செய்தலென்பதும், ஒன்பதாவது செய்யு ளால் அக்காரணத்தால் இல்லறமே அறமெனச் சிறப்பித்துக் கூறப்படுமென்பதும், பத்தாவது செய்யுளால் இவ்வாழ்க்கை யின் பயன் தேவனுதல் என்பதும் கூறப்பட்டன.

---

## குறிப்புகள்.

ஐயம் அகற்றல்;—நமது வேளாளன் 12-வது பிரதி பங்குனி மாதம் 1 தேதி பௌர்ணமியன்று வெளிவந்தது நேயர்கள் அறிந் ததே பங்குனி மாதக் கடைசிநாளிலும் சித்திரை மீ முதல்நா ளில் முற்பகுதியிலும் அமைந்த பௌர்ணமியன்று வேளாளன் வெளிவரவில்லையேயென வினவுகின்றனர். நாளது சித்திரை மீ முதல் இவ்வருடமுழுதுமே பௌர்ணமி ஒவ்வொரு மாத இறுதியி லேயே அமைவதால் அதனையனுசரித்து இம்மாத இறுதியில் அ மைந்த பௌர்ணமியாகிய இன்று நமது வேளாளனை வெளியிட்டு முறையே ஒவ்வொரு மாத இறுதியில் அமையும் பௌர்ணமியிலே யே வெளியிடுவோம்.

மஹா சந்நிதானத்தின் மகிமை:— திருவாவடுதுறையாதீன கர்த்தராக வீற்றிருக்கும் சந்நிதானம் காலஞ்சென்ற மஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண சுவாமிகளின் குருபூசா வைபவத்தை தாமாகவே சகல கைங்கர்யத்தையும் நேரிற் கவனித்துச் சமாதித் திரு உற்வத்திற்குச் செய்யவேண்டியவைகளெல்லாம் தம் திருக்கரத்தாலேயே செய்வித்து வைத்த அன்பின் திறத்தை அறிந்து நாம் பெரிதும் போற்றுகின்றோம்;

உத்தியோக மாற்றம்:— தூத்துக்குடி தென்னிந்தியா பேங்கு ஏஜண்டாகவிருந்த நமது சந்தா நேயர் திரு. ஆறுமுகம் பிள்ளையவர்கள் திருநெல்வேலி தென்னிந்தியா பேங்கு ஏஜண்டாகமாற்றப் பெற்றிருக்கிறார்கள். பிள்ளையவர்கள் நமது நகரைவிட்டுப் பிரிவதில் நாம் சிறிது வருந்தினும் அவர்கள் விருப்பம் நிறைவேறியது குறித்து மகிழ்ச்சியடைகின்றோம்.

கட்டுரையாளர்கள்கவனிக்க:- தாங்கள் எழுதியனுப்பும்கட்டுரைகளைக்கடிதத்தில் ஒரேபக்கத்தில் கூட்டெழுத்தில்லாமல் சுத்தமாக மையில் எழுதியனுப்புவதோடு, நமது வேளாளனின் தற்காலபொருளாதார நிலைமையில் அதிகமானபக்கங்களுடன் வெளிவரஇயலாமையால் ஒவ்வொருகட்டுரைகளும் நாலுபக்கங்களுக்கு அதிகப்படாமல்எழுதியனுப்பவேண்டுகிறோம்.நாலுபக்கங்களுக்கு மேற்பட்டவியாசங்களை இரண்டாகப்பிரித்து வெளியிடுவதோடு அவசியம் நேர்ந்தால் தாமதித்தும் வெளியீடுவோம். செய்யுள் கட்டுரைகள் பலவருகின்றன. தற்காலத்தில் வசனத்தைப்படிப்பவர்களே சுருங்கிவருவதால் செய்யுள்படிப்பார்யாருமில்லையென்றேசொல்லலாம். ஆதலால் வசனநடைக்கட்டுரைகளையே எழுதியனுப்பவேண்டுகின்றோம்.

பேராதரவு அருளிய பெரியார்:— நமது வேளாளனுக்கு ஆதரவு பெற வேண்டி பெரிய ஆதீனங்களிற் சிலவற்றை அணுகி விண்ணப்பித்தோம். விண்ணப்பத்தை அன்புடன் ஏற்று வேளாளனுக்கு வேண்டிய ஆதரவு அருளுவதாயும் அது குறித்துநம்மை வைகாசி மீ 2உ வர வேணுமென்றும் வற்புறுத்திக் கட்டளை

தந்தருளிய திருப்பனந்தாள் ஆதீன கர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சாமிநாதத் தம்பிரான் சுவாமிகளின் சமூகப் பற்றினையும் சமயப் பற்றினையும் நாம் பெரிதும் பாராட்டுவதோடு சமூக மக்கள் அனைவரும் பாராட் டக் கடமைப்பட்டிருக்கிறார்களெனக் கருதுகின்றோம். மறு இதழில் சுவாமிகள் அருளிய ஆதாவின் விபரத்தை விரிவாக எழுதுவோம். மற்ற ஆதீனங்களின் அபிப்பிராயத்தையும் விரை வில் அறிந்து கொண்டு மறு இதழ் முதல் விபரமான விபரங்கள் வெளியிடுவோம்.

நமது மகிழ்ச்சி:— நமது சந்தா நேயரும் ஆப்த அன்பரு மான திரு. S. இராமையா பிள்ளையவர்கள் தூத்துக்குடி நகர பரி பாலன சபையில் காலியான எட்டாவது வார்டிலுள்ள ஒரு பிரதி நிதி ஸ்தானத்திற்குப் போட்டியன்னியில் திருவருட் சீட்டில் தேர் ச்சி பெற்று ஸ்தானம் பெற்றமை குறித்து மகிழ்ச்சியடைகின் றோம். பிள்ளையவர்கள் மக்களின் நலத்தைக் கருதி தேசத்தின் போக்கைக் கருதி தம்மாலான நன்மைகள் பலவற்றைச் செய்து நல்ல பெயர் பெற விரும்புகின்றோம்.

சந்தா நேயர்களுக்கு:— சென்ற ஆண்டிற்குரிய சந்தாத் தொகையைச் செலுத்தாத நேயர்கள் இது பார்த்தவுடனாவது இவ்வாண்டிற்குரியதையும் சேர்த்து மணியார்டரில் அனுப்பி ஆதரிக்க வேண்டுகின்றோம். கொழும்பு நேயர்களெல்லாம் நமது பிரதிநிதி வசம் செலுத்தி வைக்க விரும்புகின்றோம்.

நாடாரின் நலமற்ற நடத்தை:— முனிசிப்பல் கவுன் சிலரான வக்கீல் ஸ்ரீமான் செல்லையாடேவிட் அவர்கள் ஸ்ரீமான் சி. வ. அ அளகப்ப பிள்ளை யவர்களின் வேலையாளை அவசியமில்லாமல் அக் கிரமமாய் அடித்திருப்ப தோடு பொது மக்களில் தகுதிவாய்ந் வர்களைக்கூடமதியாமல் பேசுவதாயும் நமக்குச்செய்திகிடைத்திரு க்கிறது, இச்செய்தியுண்மையானால் இது பெரிதும் கண்டிக்கத் தக்கது. இதுகுறித்து மறுமுறைசமயம் வாய்ப்பின் விரிவா எழுதுவோம்

அச்சுக்கூடத்தாரின் அஜாக்கிரதை:— வேளாளரின் வியாசங்களை அச்சியற்றும் பொழுது பிழைகளை நாம்திருத்திக்கொடுத்தாலும் அதனை அச்சுக்கூடத்தார் ஜாக்கிரதையாக திருத்தாமலும் சுத்தமான புரூப் நமது பார்வைக்கு அனுப்பாமலும் அவசர அவசரமாக அடித்து விடுகின்றனர். அவ்விதச்செயலால் இம்முறையும் பலபிழைகள் மலிந்துகிடக்கின்றன. நேயர்கள் மன்னிப்பார்களாக.

## நிலவுலக நிகழ்ச்சிகள்.

### கண்ணாடிகளாற் பறவை பிடித்தல்.

லண்டனில் இப்போது மாடப் புறாக்கள் அளவுக்கதிகமாக விருக்கின்றன. ஒரு புறாவுக்கு ஆகாரத்தைப் போட்டுவிட்டபோது மற்றொரு புறா வந்துவிட்டால் உடனே அந்தப் புறா மிக ஆவலோடு தானியங்களைப் பொறுக்க ஆரம்பிக்கின்றது. ஆதலின் லண்டன் வாசிகள் 'மற்றொரு புறா' வந்ததுபோல் காட்டுவதற்காக அந்தப் புறாவின்முன் ஒரு கண்ணாடியைக் காண்பிக்கின்றனர். அப்போது அந்தப் புறா மற்றொரு புறா வந்துவிட்டதோ என்று நினைத்துத் தானியங்களைப் பொறுக்கவரும்பொழுது அப்புறாவைப் பிடித்துவிடுகின்றனர். சிலர் இறக்கங் காட்டிப் புறாக்களை ஓட்டிவிடுகின்றனர். சுகாதாரத்தைக் கெடுக்கும் புறாக்களைப் பிடிப்பது தவறல்லவென்று வேறுசிலர் கருதுகின்றனர்.

### 1929-ல் நடந்த துணிச்சல்.

லண்டனிலுள்ள ராயல் ஹ்யூமேன் சங்கத்தார் ஒவ்வொரு வருஷமும் மிகத்தைரியமான காரியங்களைச் சாதிக்கிறவர்களுக்கு ஒரு பரிசு கொடுப்பது வழக்கம். 1929-ம் வருடத்தில் அத்தகைய காரியம் சாதித்துப் பரிசு பெற்றவர் ஸ்ரீ லியோனர்டு தாம்சன் என்பவர். அவரும் மற்றொரு நண்பரும் ஒரு தீவுக்குச் சமீபத்தில் நடுக் கடலில் ஒரு படகில் சென்றுகொண்டிருக்கையில் நண்பர் நழுவிச் சமுத்திரத்தில் விழுந்துவிட்டார். உடனே இந்த வீரர் சிறிதும் அதைரியப்படாமல் நீந்திச் சென்று அவரை இழுத்துக்

கொண்டுவந்து கரை சேர்த்தார். அவர் செம்படவ ஜாதியைச் சேர்ந்த சுமார் 18 வயது வாலிபர்.

### பிரிட்டனில் மிகப் பெரிய பாலம்.

பிரிட்டிஷ் எஞ்சினீயர்கள் தாங்களே உலகத்தில் முதன்மை யானவர் என்பதை நிரூபிக்க மீண்டும் முயன்றுவருகின்றனர். மெசாஸ் டார்மன்லாங் கம்பெனியார் சிட்னி ஹார்பர் பாலம்என்பதாகப் பெரியதொரு பாலத்தைக் கட்ட முயன்றுவருகின்றனர். அதைக் கட்டி முடிக்க 40 லட்சம் பவுன் செலவாகுமாம். அந்தப் பாலத்தின் அகலம் ஏக காலத்தில் 57 அடி அகலமுள்ள ரஸ்தாவும், நான்கு எலக்டிரிக் ரயில்வே பாதைகளும், 10 அடி அகலமுள்ள இரண்டு கால்நடைப் பாதைகளும் செல்லக்கூடிய அளவு இருக்குமாம்.

### கடலில் மிதக்கும் நகரங்கள்.

சில போர்க் கப்பல்கள் எவ்வளவு பெரிதாக இருக்கின்றன என்பதைப் பலர் அறிய மாட்டார்கள். சில கப்பல்கள் 50 ஆயிரம் டன் நிறையுள்ளனவாகவும் இருக்கின்றன. அத்தகைய கப்பல்களின் நீளம் 900 அடி. 400 அறைகளுக்கு மேல் இருக்கின்றன. நாலாயிரம் முதல் ஐயாயிரம் வரையுள்ள ஜனங்களை ஏற்றிச் செல்லும். ஒவ்வொரு கப்பலிலும் ஒன்பது மேல் கட்டுகளிருக்கின்றன. இவைகளெல்லாம் பெரிய நகரங்களைப் போலவே இருக்கின்றன.

### பூமிக்குள் வீடு.

அமெரிக்காவில் வானோக்கிக் கொண்டு, 60, 70 மாடிகள் வரையில் கட்டி வருகின்றனர். தற்காலம், ஜப்பான் தேசத்தில், பூமியில் அடுக்கடுக்காக 70, 80, மாடிகள் வரையில் கட்டி, ஒன்றிலிருந்து மறு மாடிக்குப் போவதற்கும் மேற் செல்ல இருப்பது போன்ற இயந்திரங்களும் தயாரித்து இருக்கின்றனராம். மேல் நோக்கிக் கட்டுவதைவிட, பூமிக்குள் கட்டிக் கொண்டு போவது செலவு குறைவாகவும் இலகுவாகவுமிருக்கின்றனதாம். காற்றோட்டம், வெளிச்சம் முதலியன தாராளமாக வருதற்கான சௌகரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றனவாம். இம்முறையே மிகச் சௌகரியமெனக் கருதுகிறார்களாம்.